# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302


# பிரித்தெடுக்கப்படுதல்

## முன்னுரை :

மறுபடியும் பிறந்த ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் கிறிஸ்து உயிருள்ளவராய் இருக்கிறார். ஆகையால் இவர்கள் (விசுவாசிகள்) இருளான இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் இவ்வுலகத்திற்கு உரியவர்களல்ல என்பதைத் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள் (யோவான் 15:19). விசுவாசிகள் இவ்வுலகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள் (யோவான் 15:16). அது மட்டுமல்லாமல் இவ்வுலகத்திற்கு மரித்தவர்களாயும், சிலுவை மூலம் இவ்வுலகத் திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள் (கலாத்தியர் 6:14; எபிரெயர் 10:10). விசுவாசிகள் அனைவரும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 1:2). விசுவாசிகள் அனைவரும் பாவத்திலிருந்தும், தங்கள் வாழ்க்கையில் தேவனை ஒதுக்கிவிட்டு தங்கள் விருப்பப்படி ஜீவிக்கிற மனிதர்களிடத்திலிருந்தும், இவ்வுலகத்தின் இச்சைகளிலிருந்தும், கள்ளப் போதகர்களிடத்திலிருந்தும் விலகி ஜீவிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. விசுவாசிகள் யாருடனும் சேரக் கூடாதவர்களா? விசுவாசிகள், மற்ற மனிதர்களைப்போல நாங்கள் அல்ல என்று சொல்லி பெருமைப்பாராட்டுகிற பரிசேயர்களா? கிறிஸ்தவ தலைவர் என்று சொல்லிக் கொண்டு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை மறுதலிப்பவர்களைக் குறித்து விசுவாசிகளாகிய நம்முடைய கருத்து என்ன? வேதாகம அடிப்படையில் பிரித்தெடுக்கப்படுதல் என்றால் என்ன? போன்ற கேள்விகளுக்கு இப்பாடத்தில் பதில் கொடுக்க முனைந்துள்ளோம். எங்களோடு இணைந்து இந்த சத்தியத்தைப் படிக்கும்பொழுது உங்களுடைய இருதயமும், வாழ்க்கையும் தேவனுக்கென்று அதிகமாய் பிரித்தெடுக்கப்பட்டதாய் இருக்கட்டும் (யோவான் 17:17).

## இப்பாடத்தின் முக்கியத்துவம் :

சில கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாண சட்டத்திற்கு உட்பட்டவர்களைப் போல இன்னும் அடிமைத்தனத்தில் ஜீவிக்கிறார்கள். சிலர் பரிசேயர்களைப்போல தாங்களும் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்று உலகத்திற்கு சட்டரீதியில் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விசுவாசிகள், பரிசுத்த ஆவியானவர் தங்கள் இருதயத்தில் நடப்பித்த செயலின் மூலமாக பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கையின் சுதந்திரத்தையும், சந்தோஷத்தையும் அறிந்திருக்கிறார்கள். இந்த வேறுபாட்டை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். 1 யோவான் 2:15–17 வசனங்களில், ''உலகத்திலும், உலகத்திலுள்ள வைகளிலும் அன்பு கூராதிருங்கள்'' என்று விசுவாசிகள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந் தரியாமல் இருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கப் பட்டிருக்கிறார்கள் (ரோமர் 12:2). உலகத்தின் போக்கு சபையிலும் பரவக் கூடியதாய் இருக்கிறது. தேவன் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிற காரியம் என்ன? என்பதை அறிந்துகொள்வது அவசியம். 2 தீமோத்தேயு 3:1–5 வரை வாசித்துப் பார்ப்போ மானால் கடைசி நாட்களில் ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்று தெரிந்துகொள்ளலாம். வசனம் 5, மனிதர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாய் இருப்பார்கள். இன்றைக்கும் அநேகர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு, உண்மையான கிறிஸ்தவம் என்ன என்பதை அறியாமல் ஒரு மதத்தினராகவே ஜீவித்து வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து நம்முடைய நிலை எப்படி இருக்க வேண்டும் என்பதை நாம் தெரிந்துகொள்வது அவசியம்.

### பாடம்

## I. தேவன் தமக்கென்று தெரிந்து கொண்டவர்களை இரட்சிக்கப்படாத மக்களிடத்திலிருந்தும், இவ்வுலகத்திலிருந்தும் பிரித்தெடுக்கிறார் :

அ. கலாத்தியர் 1:15–ல் நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம், ''நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்.'' அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் பிரித்தெடுத்திருக்கிறார் என்று அறிந்து கொள்ளுகிறோம்.

ஆ. எரேமியா 1:5–ல் வாசித்துப் பார்ப்போமென்றால், தேவன் எவ்விதமாய் எரேமியாவைத் தெரிந்துகொண்டு தீர்க்கதரிசியாக மாற்றியிருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். ''நான் உன்னைத் தாயின் வயிற்றில்

உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படு முன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்'' என்று சொன்னார்.

**குறிப்பு :**

பரிசுத்தம், பரிசுத்தமான, பரிசுத்தமாக்கப்பட்ட, பரிசுத்தமாக்கு போன்ற வார்த்தைகளுக்கு மூலபாஷையில் 'QODESH' (கோடேஷ்) என்ற பதம் பழைய ஏற்பாட்டிலும், 'HAQIOS' (ஹேக்கியோஸ்) என்ற பதம் புதிய ஏற்பாட்டிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பதங்களின் அடிப்படைப் பொருள் ''தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட'' என்பதாகும்.

இ. ''தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாய் இருப்பதற்கு அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டிருக்கிறார்'' என்று எபேசியர் 1:4–ல் வாசிக்கிறோம்.

ஈ. ''நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது'' என்று யோவான் 15:19–ல் வாசிக்கிறோம்.

## II. வேதத்தில் அநேகப் பொருட்கள் தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது :

அ. ''தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்'' (ஆதியாகமம் 2:3).

ஆ. ''இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும், மிருக ஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து, அது என்னுடையது'' என்றார் (யாத்திராகமம் 13:2).

இ. ''வாசஸ்தலத்தையும், அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்தினான்'' (லேவியராகமம் 8:10).

ஈ. ''மோசே அபிஷேக தைலத்திலும், பலிபீடத்தின் மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோன் மேலும், அவன் வஸ்திரங்கள் மேலும், அவன் குமாரர் மேலும் அவர்கள் வஸ்திரங்கள் மேலும் தெளித்து, ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும், அவன் குமாரரையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்தினான்'' (லேவியராகமம் 8:30).

உ. தேவாலயம் 'பரிசுத்த ஸ்தலம்' என்று அழைக்கப்பட்டது (மத்தேயு 24:15).

ஊ. ''சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது . . .'' என்று மத்தேயு 25:31–ல் வாசிக்கிறோம்.

எ. எருசலேம் நகரம் பரிசுத்தமானது (மத்தேயு 27:53).

ஏ. தேவனுடைய வசனம் பரிசுத்தமானது (ரோமர் 1:4).

**குறிப்பு :**

மேலே கூறப்பட்ட காரியங்கள் இன்னும் விரிவுபடுத்தப்படும். வேதத்தில் மக்களானாலும் சரி, பொருள்களானாலும் சரி, அவருடைய மகிமைக்கென்றும், அவருடைய பணிக்கென்றும் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பொதுவாக ஒத்துக் கொள்ளக்கூடிய உண்மையாயிருக்கிறது.

## III. அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுடைய பணிக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள் :

அ. ''ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே'' என்று லூக்கா 1:73–ல் வாசிக்கிறோம்.

ஆ. ''தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும்'' என்று அப்போஸ்தலர் 3:21–ல் வாசிக்கிறோம்.

இ. ''தீர்க்கதரிசனமானது தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்'' (2 பேதுரு 1:21).

ஈ. ''இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது'' (எபேசியர் 3:6).

உ. ''... பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசிகளே! அவளைக் குறித்து களிகூருங்கள்'' (வெளி. 18:20).

ஊ. ''அவர் சிலரை அப்போஸ்தலர்களாகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும் . . . ஏற்படுத்தினார்'' (எபேசியர் 4:13).

எ. ''இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்'' (ரோமர் 1:1).

**குறிப்பு :**

'பரிசுத்தம்' என்று சொல்லும்பொழுது 'தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டது' என்பதே இதன் அடிப்படைப் பொருள். இதை மனதில் கொள்ள வேண்டும். மேலே கூறப்பட்ட வசனங்களின் மூலமாக தீர்க்கதரிசிகளையும், அப்போஸ்தலர் களையும் தேவன் தெரிந்துகொண்டு தமக்கென்று அழைத்து மிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் அவருடைய பணிக்கென்றும், தமது மகிமைக்கென்றும் இவ்வுலகத்திலிருந்து அவர்களைப் பிரித்தெடுத்திருக்கிறார் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

## IV. கிறிஸ்துவானவர் தம்மில் தாமே பரிசுத்தமுள்ளவரும், பாவிகளினின்று பிரித்தெடுக்கப்பட்டவருமாய் இருக்கிறார் :

அ. ''ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்'' (லூக்கா 13:5).

ஆ. ''அவர் பாவஞ்செய்யவில்லை'' என்று 1 பேதுரு 22:2–ல் வாசிக்கிறோம். எபிரெயர் 4:15–ல் ''எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்'' என்று வாசிக்கிறோம்.

இ. ''பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும் வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்'' (எபிரெயர் 7:26).

**குறிப்பு :** பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவருமாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஒரு நல்ல மாதிரியாக இருக்கிறார் (1 பேதுரு 2:21–23).

## V. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும், தேவனிடத்தில் நம்பிக்கை வைத்தவர்களை பிரித்தெடுத்து, பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். இதுவே அவருடைய பிரதான நோக்கமாயிருக்கிறது :

**அ. இஸ்ரவேல் :**

1. ''நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர். ஆகையால் உங்களை பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக. நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர் சுத்தமானதற்கும், அசுத்தமானதற்கும் வித்தியாசம் பண்ணும் பொருட்டு. . . அடுத்த பிரமாணம் இதுவே என்று சொல்லுங்கள் என்றார்'' (லேவியராகமம் 11:44–47).
2. ''கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக, நீங்கள் என்னுடையவர் களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்'' (லேவியராகமம் 20:28).
3. ''நீ என் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்'' (உபாகமம் 7:6). (இதோடு கூட உபாகமம் 14:2, 26:19 வசனங்களை வாசிக்கவும்)

**குறிப்பு :**

ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தர் தம்மை இவ்வுலகத்திற்கு வெளிப்படுத்தும் பிரதான நோக்கத்தோடு இஸ்ரவேல் ஜனங்களை தெரிந்து கொண்டு அழைத்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல் அவர்களை மற்ற ஜனங்களினின்று பிரித்தெடுத்து, பரிசுத்தப்படுத்தி ஒப்பற்ற ஜனமாக வைத்திருக்கிறார் என்பது தெளிவாய் இருக்கிறது. இவ்விதமாய் புதிய ஏற்பாட்டு சபையும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, அழைக்கப்பட்டதாய் இருக்கிறது.

**ஆ. சபை :**

1. ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' (1 பேதுரு 2:9).
2. ''உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்'' (1 பேதுரு 1:15).
3. ''தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாத வர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்'' (எபேசியர் 1:4).
4. ''ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்கக் கடனாளியாயிருக்கிறோம்'' (2 தெசலோனிக்கேயர் 2:13).
5. ''உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக. . .'' (எபேசியர் 3:10).

<u>குறிப்பு :</u>

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையையும், வல்லமையையும், ஞானத்தையும் இவ்வுலகத்திற்கு வெளிப்படுத்தும் பிரதான நோக்கத்தோடு சபையானது தேவனாலே தெரிந்துகொள்ளப்பட்டும், அழைக்கப்பட்டும், பிரித்தெடுக்கப்பட்டும், பரிசுத்தமாக்கப்பட்டும் இருக்கிறது என்பது தெளிவாய் விளங்குகிறது.

## VI. புதிய ஏற்பாட்டில் விசுவாசிகள் பரிசுத்தமாக்கப்பட்டு தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களாய் இருக்கிறார்கள், அதுமட்டுமல்லாமல் பரிசுத்த ஜீவியம் செய்யும்படி எச்சரிக்கப்பட்டும் இருக்கிறார்கள் :

**அ. பரிசுத்தவான்களாய் காணப்படுகிறார்கள் :**

1. ''அவர்கள் என்னைப்பற்றும் விசுவாசத்தினாலே, பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக'' (அப்போஸ்தலர் 26:18).
2. ''தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்'' (எபேசியர் 1:4).
3. ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' (1 பேதுரு 2:9).
4. ''தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது, நீங்களே அந்த ஆலயம்'' (1 கொரிந்தியர் 3:17).

**ஆ. பரிசுத்த ஜீவியம் செய்யும்படி எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள் :**

1. ''இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுங்கள்'' (ரோமர் 6:19).
2. ''நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்'' (ரோமர் 12:1).
3. ''அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்'' (எபேசியர் 4:22–24).
4. ''பிரியமானவர்களே, மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணபடுத்தக்கடவோம்'' (2 கொரிந்தியர் 7:1)

<u>குறிப்பு :</u>

தேவனுடைய பார்வையில் விசுவாசிகளாகிய நீங்கள் பரிசுத்தவான்களாக காணப்படுகிறீர்கள், அதுமட்டுமல்ல பரிசுத்த ஜீவியம் செய்யவேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து இந்த உண்மையை சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்பது எங்களது நம்பிக்கை.

## VII. பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களாக நாம் எப்படி மாறுகிறோம்?

அ. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பலி மரணத்தினாலே மீட்கப்பட்டு, தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களாய் இருக்கிறோம்

1. ''இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்'' (எபிரெயர் 10:10).
2. ''பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்'' (எபிரெயர் 10:14).
3. ''தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தம்'' (எபிரெயர் 10:29).

ஆ. ''சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக'' (1 தெசலோனிக்கேயர் 5:23).

இ. ''பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்'' (எபிரெயர் 2:11).

ஈ. ''பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு'' (ரோமர் 15:15). (இதனோடுகூட 2 கொரிந்தியர் 3:18, 2 தெசலோனிக்கேயர் 2:13 வசனங்களை வாசிக்கவும்)

உ. ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்'' (யோவான் 17:17). (இதனோடுகூட எபேசியர் 5:26,27 வசனங்களை வாசிக்கவும்)

**குறிப்பு :**

ஒருவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்து அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் அந்நேரமே ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறார் (1 கொரிந்தியர் 12:13). தேவனுடைய வசனத்தின் மூலமாகவும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பலி மரணத்தின் மூலமாகவும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேகத் தெய்வம் பாவத்திலிருந்தும், இவ்வுலகத்திலிருந்தும் பிரித்தெடுத்திருக்கிறார் (எபேசியர் 1:3,4; 1 கொரிந்தியர் 1:2).

## VIII. நாம் எதிலிருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டும்?

**அ. பாவம் :**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு முதல் முறையாக வந்ததின் பிரதான நோக்கம் நம்முடைய பாவத்திலிருந்து நம்மை இரட்சிப்பதற்கே (கலாத்தியர் 1:4; மத்தேயு 1:21; எபிரெயர் 9:26; 10:12).

1. முற்காலத்தில் நாம் அந்தகாரத்தில் இருந்தோம். ஆனால் இப்பொழுது கர்த்தருக்குள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருக்கிறோம். ஆகையால் நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளும்படி அவர் கட்டளையிடுகிறார் (எபேசியர் 5:8; அப்போஸ்தலர் 26:18; 1 யோவான் 1:7).
2. பழைய பாவமனுஷனை களைந்துபோட்டு, புதிய மனுஷனாகிய கிறிஸ்துவை தரித்துக் கொள்ள வேண்டும் (எபேசியர் 4:22–32; கொலோசெயர் 3:5–10).
3. பாவத்தை தள்ளிவிட வேண்டும் (எபிரெயர் 12:1; 2 தீமோத்தேயு 2:19).

**ஆ. பாவிகள் :**

விசுவாசிகளாகிய நாம் அனைவரும் பரிசுத்த ஜனங்கள் ஆகையால் இவ்வுலகத்தின் காரியங்களோடும், தெய்வ பக்தியில்லாத ஜனங்களோடும் பாவிகளோடும் அவர்களுடைய கிரியைகளில் பங்கு கொள்ளாதபடி நாம் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டுமென்று தேவன் எதிர் பார்க்கிறார்.

1. ''அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள்'' (எபேசியர் 5:7).
2. ''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப் பீர்களாக. நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்கிறார்'' (2 கொரிந்தியர் 6:14–17).

**குறிப்பு :**

பரிசுத்த தெய்வத்திற்கு நிந்தையை கொண்டுவரக்கூடிய எல்லா காரியங்களினின்றும் விலகி ஜீவிப்பதே பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை.

**இ. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு தங்கள் விருப்பப்படி ஜீவிக்கிற ஜனங்களிடத்திலிருந்து நாம் பிரித்தெடுக்கப்பட வேண்டும்.**

1. ''சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும், நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்'' (2 தெசலோனிக்கேயர் 3:6).
2. ''இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்படியாமற் போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள்'' (2 தெசலோனிக்கேயர் 3:14).

**குறிப்பு :**

மேற்கூறப்பட்ட வேத வசனங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளுகிற உண்மை என்னவென்றால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற இவர்கள், தாங்கள் கற்றுக்கொண்ட வேதவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாயிருந்தார்கள். இவர்கள் சோம்பேறிகளாகவும் அஜாக்கிரதையானவர்களும், பொறுப்பை உணராதவர் களுமாய் இருந்தார்கள். கர்த்தராகிய கிறிஸ்து அதி சீக்கிரம் வரப்போகிறார் என்ற நம்பிக்கையிலே தாங்கள் கற்றுக்கொண்ட யாவற்றையும் செயல் முறைக்குக் கொண்டுவர தவறி விட்டார்கள். கொரிந்து சபையிலே கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு இருந்தவர்களில் சிலர் விபச்சாரக்காரரும், விக்கிரக ஆராதனைக்காரரும், குடிகாரருமாய் இருந்தார்கள்.

'நாங்களும் கிறிஸ்தவர்கள்' அல்லது 'விசுவாசிகள்' என்று சொல்லிக் கொள்ளுகிற இப்படிப்பட்ட ஜனங்களைக் குறித்து நம்முடைய அபிப்ராயம் என்ன? ''...சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபச்சாரக்காரனாயாவது, பொருளாசைக் காரனாயாவது, விக்கிரகாராதனைக் காரனாயாவது . . . அவனோடே கலந்திருக்கக்கூடாது. அப்படிப்பட்டவனுடனே கூடப்

புசிக்கவும் கூடாது'' (1 கொரிந்தியர் 5:11). ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நாம் விட்டு விலக வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 3:6). வசனத்துக்கு ஒருவன் கீழ்படியாமற்போனால் அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருக்க வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 3:14). ஒழுங்கற்ற சகோதரர்களை நாம் கடினமாகப் பேசவோ, தண்டிக்கவோ கூடாது. ஆனால் நாம் அவர்களிடமிருந்து பிரிந்து வாழ வேண்டும். நமது வாழ்க்கையின் மூலம் அவர்கள் தேவனுடைய வசனத்திற்கு எதிர்மறையாக வாழ்கிறார்கள் என்றும், அவர்களை நாம் உடன் சகோதரர்கள் என்று கருதுவது இல்லை என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

**ஈ. இவ்வுலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டும் :**

''சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் இவ்வுலகம் இருக்கிறது. இவ்வுலக மக்கள் கடவுளின் துணையின்றி சந்தோஷமாய் இருக்க தாங்களே முயற்சி செய்கிறார்கள்'' என்று **டாக்டர் கேரி ஐயோன்சைடு** கூறியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில் 'உலகம்' என்ற வார்த்தை மூன்று நிலைகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1. மத்தேயு 26 ஆம் அதிகாரம் 13–ம் வசனத்தில் 'உலகம்' என்ற வார்த்தை மனித இனம் முழுவதையும் குறிக்கக் கூடியதாய் இருக்கிறது.
2. எபிரெயர் 11:3–ல் 'உலகம்' என்ற வார்த்தை சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தைக் குறிக்கக்கூடியதாய் இருக்கிறது. (இதனோடு கூட எபிரெயர் 4:3; எபேசியர் 1:4 வசனங்களை வாசிக்கவும்).
3. 1 யோவான் 2:15–17 வரை வாசித்துப் பார்ப்போமென்றால் 'உலகம் என்ற வார்த்தையானது' 'இரட்சிக்கப்படாத ஜனங்கள்' சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது, மூன்றாவது மொழியாக்கத்தின் அடிப்படையில் இப்பாடம் அமைந்துள்ளது. 'உலகம்' என்ற வார்த்தை 'KOSMOS' (காஸ்மாஸ்) என்ற கிரேக்கு வார்த்தையிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இரட்சிக்கப்படாத ஜனங்கள் சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதுமன்றி அவனுடைய கோட்பாடுகளைப் பின்பற்றுகிறவர்களுமாய் இருக்கிறார்கள். அதாவது தங்கள் வாழ்க்கையில் தேவனை ஒதுக்கிவைத்துவிட்டு இச்சையடக்கமில்லாதவர்களும், பொருளாசை நிறைந்தவர்களும் பெருமை நிறைந்தவர்களுமாய் காணப்படுகிறார்கள்.

**உ. இவ்வுலகத்தைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார்?**

1. இவ்வுலகம் சாத்தானால் கட்டுப்படுத்தப்படுகிறது (யோவான் 14:30, 16:11, எபேசியர் 2:2; 2 கொரிந்தியர் 4:4, 1 யோவான் 5:19, மத்தேயு 4:8,9).
2. இவ்வுலகம் கிறிஸ்துவைப் பகைக்கிறது (யோவான் 15:18, 7:7, 16:33).
3. ''மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமை யுமாகிய உலகத்திலுள்ளவை களெல்லாம் பிதாவினாலுண்டானவை களல்ல. அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்'' (1 யோவான் 2:16).
4. இவ்வுலகம் பாவியான மனுஷனுக்கு ஆவிக்குரிய காரியங்கள் எதையும் கொடுப்பதில்லை. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை உலகம் நேசிப்பதில்லை (யோவான் 17:14), பதிலாகப் பகைக்கிறது. ''உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும், அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது'' (யோவான் 14:17; 1 கொரிந்தியர் 2:9–12).

**இவ்வுலகத்தைக் குறித்து விசுவாசிகளாகிய நம்முடைய எண்ணமும், தொடர்பும் என்ன?**

i. ஒரு விசுவாசி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு இவ்வுலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறான் (யோவான் 15:16).

ii. ஒரு விசுவாசி உலகத்துக்குச் சொந்தமானவனல்ல (யோவான் 15:19).

iii. ஒரு விசுவாசி இவ்வுலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பியுள்ளான் (2 பேதுரு 1:4).

iv. ஒரு விசுவாசி இவ்வுலகத்துக்கு மரித்திருக்கிறான் (கலாத்தியர் 6:14).

v. இவ்வுலகத்தால் ஒரு விசுவாசி பகைக்கப்பட்டிருக்கிறான் (யோவான் 15:19).

vi. ஒரு விசுவாசி இவ்வுலகத்தின் மேல் அன்புகூராதிருக்க வேண்டும் (1 யோவான் 2:15).

vii. உலகத்துக்குச் சிநேகிதனாக விசுவாசி இருக்கக்கூடாது (யாக்கோபு 4:4).

viii. உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் (யாக்கோபு 1:27).

ix. ஒரு விசுவாசி இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கக்கூடாது (ரோமர் 12:2).

x. ஒரு விசுவாசி பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளக்கூடாது (2 தீமோத்தேயு 2:4).

xi. ஒரு விசுவாசி உலகத்தை ஜெயிக்கக்கூடியவனாய் இருக்க வேண்டும் (1 யோவான் 5:4).

**ஊ. கள்ளப்போதனைகளிலிருந்தும், கள்ளப் போதகர்களிடமிருந்தும் நாம் பிரித்தெடுக்கப்பட வேண்டும் :**

1. கள்ளப்போதனை என்றால் என்ன?

   மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை மறுதலிப்பதே கள்ளப்போதனையாகும். 1 யோவான் 4:1–4 வரை வாசித்துப் பார்ப்போமானால் நமக்குத் தெளிவாய் விளங்கும். 2 பேதுரு 2:1–ல் இவ்விதமாய் வாசிக்கிறோம். அதாவது ''கள்ளத்தீர்க்கதரிசி களும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும், கள்ளப் போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்'' (2 தீமோத்தேயு 3:5).

**குறிப்பு :**

கள்ளப்போதனை என்பது அறியாமையினாலே செய்யக்கூடிய ஒரு தவறு அல்ல (அப்போஸ்தலர் 19:1–6; 2 தீமோத்தேயு 2:25,26).

2. கள்ளப்போதகர் என்றால் என்ன?

   i. கள்ளப்போதகர் செவித்தினவுள்ளவரும், சத்தியத்தை விலக்கிக் கட்டுக்கதைகளை போதிக்கிறவருமாய் இருக்கிறார் (2 தீமோத்தேயு 4:3,4)

   ii. 2 பேதுரு 2:1–3, 10–19 வசனங்கள் வரை வாசித்துப் பார்போமெனில், கள்ளப்போதகர்களைக் குறித்துத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

   iii. பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசு களின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் (1 தீமோத்தேயு 4:1–3).

   iv. ஆட்டுத்தோலைப் போர்த்திய ஓநாய்களாய் இருப்பார்கள் (மத்தேயு 7:15,16).

   v. கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள் (மாற்கு 13:22).

   vi. யூதாவின் புஸ்தகம் 4,8,11,13,16 போன்ற வசனங்களை தெளிவாகப் படிக்கவும்.

3. கள்ளப்போதனைகளைக் குறித்தும், கள்ளப்போதகர்களைக் குறித்தும் விசுவாசிகளாகிய நம்முடைய கருத்து அல்லது எண்ணம் எதுவாய் இருக்க வேண்டும்?

   i. ''ஒருவர் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் (அதாவது மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்து தெய்வம்) கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்'' (2 யோவான் 10,11).

   ii. கள்ளப்போதகர்களை விட்டு விலக வேண்டும் (ரோமர் 16:17).

   iii. ''நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்'' (கலாத்தியர் 1:8,9).

   iv. இப்படிப்பட்டவர்களை நாம் விட்டு விலக வேண்டும் (2 தீமோத்தேயு 3:5).

   v. கள்ளப்போதகர்களைக் கண்டிப்பாய்க் கடிந்து கொள்ள வேண்டும் (தீத்து 1:14).

   vi. அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறிய வேண்டும் (1 யோவான் 4:1–4).

**குறிப்பு :**

விசுவாசிகளாகிய நாம் கள்ளப்போதனைகளையும், கள்ளப்போதகர்களையும் வெறுத்து ஒதுக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. கள்ளப்போதகர்களுக்குத் தண்டனை காத்துக் கொண்டு இருக்கிறது (2 தெசலோனிக்கேயர் 2:19–12; 2 பேதுரு 2:17,21) கள்ளப்போதனை நிறைந்த சபையில் ஒரு விசுவாசி இருந்துகொண்டு அச்சபையில் உயிர்மீட்சி உண்டுபண்ண விரும்பினால் அது வெறும் போலித் தன்மையே ஆகும். விசுவாசிகளாகிய நாம் கள்ளப்போதனைகளை விட்டு விலக வேண்டுமென்று தேவனிடமிருந்து கட்டளை பெற்றிருக்கிறோம்.

## IX. நாம் ஏன் பிரித்தெடுக்கப்பட்டிக்கிறோம்?

அ. ''நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குப் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம்'' (1 பேதுரு 2:9).

ஆ. ''தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிந்து நிரூபிப்பதற்காகவே பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம்'' (ரோமர் 12:2).

இ. ''பிதாவாகிய தேவனுடைய எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்று அனுபவிப்பதற்காக பிரித்தெடுக்கப்பட்டிருக் கிறோம்'' (2 கொரிந்தியர் 6:17,18).

ஈ. கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருக்கும்படி நாம் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம். உலகம் கிறிஸ்துவைப் பகைத்தது (யோவான் 7:7). இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசானவன் கிறிஸ்துவுக்குப் பகைஞனாய் இருக்கிறான் (யோவான் 14:30; 1 யோவான் 5:19).

உ. உலகத்தால் கறைபடாதபடிக்கு நம்மை காத்துக் கொள்ளவேண்டுமென்றே பிரித்தெடுத்திருக்கிறார் (யாக்கோபு 1:27; 2 தீமோத்தேயு 4:10; மத்தேயு 13:22).

ஊ. கிறிஸ்துவின் ஐசுவரியத்தை வெளிப்படுத்தும் பொருட்டு நாம் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 8:32; பிலிப்பியர் 4:19).

எ. மற்றவர்களுக்கு பரலோகத்துக்குப் போகும்வழியை தெரிவிப்பதற்காக பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம் (மத்தேயு 5:16).

''மனிதர்கள் உன்னில் இவ்வுலகத்தைப் பார்த்தால் அவர்களை பரலோகத்துக்கு அடுத்த காரியங்களுக்கு நேராக வழிநடத்துவது கடினமான காரியம்'' என்று **பில்லிசண்டே** அவர்கள் கூறியிருக்கிறார்.

## X. வேதாகம அடிப்படையில் ''பிரித்தெடுப்பு'' அல்லது ''பிரித்தெடுக்கப்படுதல்'' என்ற தலைப்பின் கீழ் சில இறுதிக் குறிப்புகள் :

அ. விசுவாசிகளாகிய நீங்கள் இவ்வுலகத்திற்கு உரியவர்களல்ல, ஆனால் இவ்வுலகத்தில் இருக்கிறீர்கள். எனவே உங்களது ஒளியானது இவ்வுலகத்தில் பிரகாசிக்க வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும் (மத்தேயு 5:16).

ஆ. 'பிரித்தெடுக்கப்படுதல்' என்று சொல்லும் பொழுது 'இவ்வுலகத்திலிருந்தே நீக்கப்பட்டு போகுதல்' என்று பொருள் அல்ல. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஆயக்காரரோடும், பாவிகளோடும், போஜனம் பண்ணினார் (மத்தேயு 9:11). கர்த்தாகிய இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களைக் கண்டு திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள் (யோவான் 6:1–14). அப்போஸ்தலாகிய பவுல் தன்னை வேறுபடுத்திக் காட்டாதபடி எங்கெல்லாம் சென்றாரோ, அந்த மக்களுடன் தன்னை ஒன்றித்துக்கொண்டு பேசியிருப்பதை நாம் பார்க்கலாம்.''பலவீனரை ஆதாயப்படுத்தி கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்'' (1 கொரிந்தியர் 9:22).

இ. விசுவாசிகளாகிய நீங்கள் எதற்காக பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து அதன்படி ஜீவிக்க வேண்டும்.

ஈ. பரிசேயர்கள் தாங்களே பரிசுத்தவர்கள், நீதிமான்கள் என்று பெருமிதம் கொண்டு தங்கள் பெருமையிலே மூழ்கிப் போனார்கள். அவர்களைப் போல விசுவாசிகளாகிய நீங்களும் பெருமிதம் கொண்டு உங்கள் பெருமையிலே மூழ்கிப்போகாதபடி அவைகளை விட்டு விலகுங்கள்.

உ. பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும், தேவ வசனத்தினாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தினாலும், ஒரு விசுவாசியினுடைய இருதயத்திலும், வாழ்விலும் 'பிரித்தெடுப்பு' நடைபெற்று இருக்கிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும் (எபிரெயர் 10:10, 14; யோவான் 17:17; ரோமர் 15:16; 2 தெசலோனிக்கேயர் 2:13).

ஊ. 'பிரித்தெடுக்கப்படுதல்' என்பது குளிர்ந்து போன அல்லது தொழில் நுட்பமான அல்லது இயந்திரம் போன்ற அல்லது சட்டப்பூர்வமான ஒன்று அல்ல. ஆனால் இவை பரிசுத்த ஆவியானவராலே செய்யப்படுகிற ஒரு காரியமாகும். இவை ஆத்துமாவை இரட்சிக்கக்கூடியதாகவும், கிறிஸ்துவை மகிமைப்படுத்தக் கூடியதாகவும் தேவனுக்குக் கனத்தைச் செலுத்தக்கூடியதாகவும், நேர்மையானதாகவும் இருக்கிறது என்பதை விசுவாசித்து நடைமுறை ஜீவியத்தில் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# பிரித்தெடுக்கப்படுதல்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. ‘பரிசுத்தமாக்கப்படுதல்’ என்ற வார்த்தையின் பொருள் என்ன ?
   a. தேவன் பாவியை நீதிமான் என்று அறிவிக்கிறார்
   b. ஒரு விசுவாசி பரிசுத்தமான நபர்
   c. ஒரு விசுவாசி தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவராக இருக்கிறார்
2. தேவன் தாம் தெரிந்து கொண்டவர்களை உலகத்திலிருந்து பிரித்தெடுக்கிறார். இதற்கான வேதபகுதி எது ?
   a. எரேமியா 1:5
   b. யோவான் 17:17
   c. அப்போஸ்தலர் 26:18
3. கிறிஸ்து பிரித்தெடுக்கப்பட்டவர் எந்நிலையில் ?
   a. அவர் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார். இருப்பினும் சில சமயங்களில் அவரால் பாவம் செய்ய முடியும்
   b. அவரால் பாவிகளோடு தொடர்பு கொள்ள முடியும். ஆனால் அவர்களில் ஒருவராக முடியாது
   c. அவர் விரும்பினால் அவரால் பாவம் செய்ய முடியும்
4. தேவன் தம்முடைய மக்களைக் குறித்ததான பிரதான நோக்கம் என்ன ?
   a. அவர்களின் எதிரிகளை முறியடிக்க வேண்டும்
   b. அவர்கள் பிரித்தெடுக்கப்பட்டு, பரிசுத்தமான ஜீவியம் செய்ய வேண்டும்
   c. அவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும்
5. தேவனின் பார்வையில் விசுவாசிகள் அனைவரும் பரிசுத்தவான்கள். எனவே அவர்கள் எப்படி வாழ வேண்டும் ?
   a. பாவத்திலிருந்து விலகி வாழ வேண்டும்
   b. மரியாதையோடு வாழ வேண்டும்
   c. பிறருக்கு நன்மையும், சமாதானமும் கொண்டு வரும் வாழ்க்கை வாழ வேண்டும்
6. தேவனுக்கு முன்பாக எதன் மூலம் நாம் நித்தியமாக பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் ?
   a. கிறிஸ்துவின் பலிமரணத்தின் மூலம்
   b. பரிசுத்த ஆவியானவரின் பணியின் மூலம்
   c. திரித்துவத் தேவனின் பணியின் மூலம்
7. ‘உலகம்’ என்ற வார்த்தைக்கு டாக்டர். ஐயோன்சைடு கூறும் விளக்கம் என்ன ?
   a. ஆகாயத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு பந்து உருண்டை
   b. அனைத்து மக்களும் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்
   c. சாத்தானால் கட்டுப்படுத்தப்படும் உலகத்தில், மக்கள் அனைவரும் ஆண்டவரின் உதவியில்லாமல் மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்கின்றனர்.

8. கள்ளப்போதனை என்றால் என்ன ?

   a. அப்போஸ்தலப் பதவியாகும்

   b. அறியாமையினால் உண்டாகும் தவறாகும்

   c. இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாக இருப்பதை மறுதலிப்பது

9. கள்ள உபதேசம் கொண்ட சபைக்கும், ஒரு உண்மையான விசுவாசிக்கும் இடையே காணப்படும் உறவு எப்படி இருக்கும் ?

   a. கள்ளப்போதனை கொண்ட சபையை விட்டு விலகி, உண்மையான சத்தியத்தைப் போதிக்கும் திருச்சபையைக் கண்டுபிடிக்க வேண்டும்

   b. அந்த சபையில் இருந்து அதை மாற்ற முயற்சி செய்ய வேண்டும்

   c. ஒன்றும் சொல்லாமல் அந்தச் சபையில் இருக்க வேண்டும்

10. வேதாகமத்தில் அநேக காரியங்கள் தேவனுக்கென்று 'பிரித்தெடுக்கப்பட்டது' அல்லது 'பரிசுத்தமாக்கப்பட்டது' என்று சொல்லப்பட்டுள்ளது. அவைகளில் **நான்கை** வட்டமிடவும்.

   a. இயேசுவானவரின் பிறப்பின் ஸ்தலம்
   b. ஏழாம் நாள்

   c. ஆசரிப்புக்கூடாரம்
   d. இயேசுவானவர் மரித்த சிலுவை மரம்

   e. வேதாகமம்
   f. வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள்

   g. எருசலேம் நகரம்

11. **பொருத்துக :–** இந்த உலகத்தைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார் ? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| ------------ | சாத்தானால் கட்டுப்படுத்தப்படுகிறது | a. 1 யோவான் 2:16 |
| ------------ | கிறிஸ்துவுக்கு எதிரானது | b. 1 கொரிந்தியர் 2:9–12 |
| ------------ | இச்சையினால் நிறைந்திருக்கிறது | c. யோவான் 15:18 |
| ------------ | தேவனின் காரியங்களைப் புரிந்துகொள்ள மாட்டாது | d. 1 யோவான் 5:19 |

12. எந்த அப்போஸ்தலன் தன்னை தேவன் தாயின் கருவிலிருந்து பிரித்தெடுத்து ஊழியத்துக்கு அழைத்தார் என கூறுகிறார் ?

------------------------------------------------------------------------

13. **பொருத்துக :–** 'உலகம்' என்ற வார்த்தை வேதாகமத்தில் மூன்று வழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| ------------ | அனைத்து மனுக்குலம் | a. 1 யோவான் 2:15–17 |
| ------------ | சிருஷ்டிக்கப்பட்ட உலகம் | b. மத்தேயு 26:13 |
| ------------ | இரட்சிக்கப்படாத ஜனங்கள் | c. எபிரெயர் 11:3 |

14. எபேசியர் 3:6–ம் வசனம், அப்போஸ்தலர்கள் --------------------------மக்கள் என்று நமக்குச் சொல்லுகிறது.

15. எபிரெயர் 7:26–ம் வசனத்தில், கிறிஸ்து உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர் என்பதை காண்பிக்கும் **ஐந்து** வார்த்தைகளை வரிசைப்படுத்தவும்.

a. ------------------------------------ b. ------------------------------------

c. ------------------------------------ d. ------------------------------------

e. ------------------------------------

16. **பொருத்துக :–** விசுவாசிகள் எதிலிருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டும்? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| ----------- | பாவம் | a. 2 கொரிந்தியர் 6:14–17 |
| ----------- | அவிசுவாசிகள் | b. 1 யோவான் 2:15–17 |
| ----------- | தகுந்த முறையில் நடக்க மனமற்ற கிறிஸ்தவர்கள் | c. 2 தெசலோனிக்கேயர் 3:6 |
| ----------- | உலகம் | d. 2 தீமோத்தேயு 3:5 |
| ----------- | கள்ளப்போதனை, கள்ளப்போதகர்கள் | e. எபிரெயர் 12:1 |

17. லேவியராகமம் 11:44–47 வசனங்களின்படி, யூதர்கள் அறிய வேண்டிய **இரண்டு** காரியங்கள் என்ன?

a. --------------------------------------------------------------------------------

b. --------------------------------------------------------------------------------

18. **பொருத்துக :–** இவ்வுலகத்தைக் குறித்து விசுவாசிகளாகிய நம்முடைய எண்ணமும், தொடர்பும் என்ன? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| ----------- | உலத்திலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறார் | a. 2 பேதுரு 1:4 |
| ----------- | உலகத்துக்குச் சொந்தமானவரல்ல | b. கலாத்தியர் 6:14 |
| ----------- | உலகத்தின் கேட்டிற்குத் தப்பியிருக்கிறார் | c. ரோமர் 12:2 |
| ----------- | உலகத்திற்கு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார் | d. யோவான் 15:19 |
| ----------- | உலத்திற்கு நண்பனாக இருக்க முடியாது | e. யோவான் 15:16 |
| ----------- | உலகத்தை நேசிக்கக்கூடாது | f. 1 யோவான் 5:4 |
| ----------- | உலகத்தோடு ஒத்துப்போகக்கூடாது | g. யாக்கோபு 4:4 |
| ----------- | உலகத்தை ஜெயிக்க வேண்டும் | h. 1 யோவான் 2:15 |

19. எபேசியர் 1:4–ன்படி, ஒரு விசுவாசி எப்படி இருக்க வேண்டும்?

--------------------------------------------------------------------------------

20. 1 பேதுரு 2:9—ம் வசனத்தின் நோக்கம் என்ன ?

------------------------------------------------------------------------

21. யோவான் 17:17—ன்படி, நம்மை சுத்தப்படுத்துகிறது எது ?

------------------------------------------------------------------------

22. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களின்படி, வேதவசனத்துக்குக் கீழ்ப்படியாத கிறிஸ்தவர்களிடம், ஒரு விசுவாசி எப்படி நடந்து கொள்ள வேண்டும் ?

a. 2 தெசலோனிக்கேயர் 3:6 ------------------------------------------------

b. 2 தெசலோனிக்கேயர் 3:14 ------------------------------------------------

c. 1 கொரிந்தியர் 5:11 ------------------------------------------------

23. மறுதலிக்கும் மக்களைக் குறித்து ஒரு விசுவாசி எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் ?

a. 2 யோவான் 10,11 ------------------------------------------------

b. ரோமர் 16:17 ------------------------------------------------

c. கலாத்தியர் 1:8,9 ------------------------------------------------

d. 2 தீமோத்தேயு 3:5 ------------------------------------------------

e. தீத்து 1:14 ------------------------------------------------

f. 1 யோவான் 4:1—4 ------------------------------------------------

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ____________________________________________

முகவரி : ____________________________________________

____________________________________________